உ

சிவமயம்



சிவபதம் அடைந்த

## திருமதி. இந்திராதேவி சோமசுந்தரம்

## நினைவில் மலர்ந்த

# இந்திரமலர்

15-04-2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவடிக்கு
# சமர்ப்பணம்

குலவிளக்காய் நின்று - நம்
குடும்பத்திற்கு ஒளிதந்து
உழைப்பால் உயர்ந்து
உறவால் மேலோங்கி
கடமையை கண்ணியமாக்கி
கல்வியில் எம்மை உயர்த்தி
இன்புடன் வாழ வைத்து
இல்லத்திற்கோர் இறையுருவாய் வாழ்ந்து
எம் மண்ணை விட்டுப் போனாலும்
எம் மனதை விட்டும் அகலாத
எமது அன்புத் தாயின்
திருவடிகளுக்கு இம்மலரினை
சமர்ப்பிக்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்



அமரர்.

# திருமதி. இந்திராதேவி சோமசுந்தரம்

அன்னையின் மடியில்
17-06-1946

சிவனின் திருவடியில்
14-03-2010

## திதி வெண்பா

ஆண்டு விரோதியிலே ஆயதமிழ்ப் பங்குனியில்
பூண்ட அபரச் சதுர்த்தசியில் - ஆண்ட சிவன்
இன்னருளில் சேர்ந்தார் இந்திராதேவி சோமசுந்தரம்
முன்னவனைப் போற்று முனைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் – விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

## தேவாரம்

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மையறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய் செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம் பொற் சோதீ

## திருவாசகம்

வேண்டத் தக்க(து) அறிவாய் நீ
வேண்ட முழுதும் தருவாய் நீ
வேண்டும் அயன் மாற்(கு) அறியோய் நீ
வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீ யா(து) அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன்(று) உன்டென்னில்
அதுவும் உன்தன் விருப்பன்றே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரை இலாக் கருணை மா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் சென்ற எம் சிவனை
திரு வீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர என் கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலிய
சிவலோக நாயகன் சேவடிக் கீழ்
ஆகும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகும் கழற
உழறி உமை மணவாளனுக்(கு) ஆம்
பாரும் விசும்பும் அறியும்
பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
இறைவா! நீ ஆடும் போது உன் அடியின் கீழ் இருக்க வேண்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள் சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதத் புனர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையயோனே கதிர்காமப் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருச்சிற்றம்பலம்

## திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

# சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் யவாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருள்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொழியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர்சஷ்டி கவசம்



காப்பு

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம்! நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டை யுங் கைகூடும் நிமலரருள் கந்த
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

## நூல்

நிலைமண்டில ஆசிரியப்பா.

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செய்யும் மயில்வா கனனார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக

வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக

சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க

விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்

சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்

திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண

ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து

முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழிகளால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணிணை காக்க
விரிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க

சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க

வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க

முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியினில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க

பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்

கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்

பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூ தனெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கைகால் முறியக்

கட்டு கட்டுக் கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடா தோட

தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுந்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி பக்கப்
பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருஅரை யாப்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொளி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்

காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்!
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா!

கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!

காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினே னாடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை

நேச முடன்யான் நெற்றியி லணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புட இரஷி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்

வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்

பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்ததை
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முட னொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்

சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே ஜெபித்து உகந்த நீறணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி

அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்

சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி

திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே

மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவம் பெற்ற
# அன்பு மனைவி

இல்லாளைத் தேட பலரின் உதவியை
நாடுவோர் இவ் உலகினில் ஏராளம்
நட்சத்திரம்–இராசி–யோனி–கனமென
பல்வேறு ஆய்வுகள் மேற் கொள்வார்கள்

நாம் இருவர் ஒருவரை ஒருவர் விரும்பினோம் இதயம் ஒன்றுபட்டது திருமணம் செய்து கொண்டோம்

எமக்கு திருமணத்தை நடாத்திய குரு, சைவமக்களால் மேன்மையான குருவாகக் கருதப்பட்ட உயர்திரு சண்முகரெத்தினக் குருக்கள் (அமரர்)

திருக்கோணமலை திரு. விஸ்வநாதசுவாமி (சிவன்) கோயிலில் எமது திருமணம் நடைபெற சிவன் அருளும் கிடைத்தது.

நாற்பத்தி மூன்று ஆண்டுகளாக மகிழ்வான வாழ்வு வாழ்ந்தோம்.

அதிவிரைவில் என்னைக் கைவிட்டு என்மனைவி இறைவன் திருவடியை நாடினார். இதனை என்னால் தாங்கிக் கொள்ள முடியாதுள்ளது.

அவர் என்னுடன் வாழ்ந்த நாட்களில் எக் குறையின்றி வாழ்ந்தார் வாழ வைத்தார்.

இறுதி நாளை உணர்ந்தாரோ தெரியாது தொடர்ந்து.

என்னைக் கட்டியணைத்து நான் இல்லாமல் "நீ" என்ன செய்யப்போகிறாய் என்று அழுதார்.

இறுதி நாட்களில் பல முறை அழுதார்.

என்னைத்தனிமையில் விட்டு பிரிவதற்கு மிகவும் வேதனைப்பட்டார். இறுதி மூச்சுவரை அவரை மிகவும் ஆட்கொண்டிருந்தது. என்னைப்பற்றிய ஏக்கம் நிறைந்த சோகம், அதற்குரிய காரணம் என்மீது காட்டிய அன்பாகும். நாற்பத்து மூன்று ஆண்டுகளாக அவரது நல்நோக்கு நலல சிந்தனைகள் ஊடாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து. வானுறையும் உயர் நிலையினை அடைந்தார்.

**அமரத்துவமீ பெற்றார்**
**அழிக்கமுடியாது – அவர் நாமம்.**
**இராசையா சோமசுந்தரம்**
**அன்பான் கணவர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கமே
# என் மகளே

பெற்றதாய் பெரிதுவக்க
பெற்றெடுத்தேன் பெருமகளாக
இந்திராதேவியென பெயரிட்டேன்
இவ்வுலகில் நற்குணவதியென
பெயரும் கொண்டாய்
தங்கமென மகிழ்ந்திருந்தேன்
மங்காது உன் நினைவு
நீங்காது இத்துயரம்

**பெற்றெடுத்து பெருமை பெற்ற தாய்**
**வள்ளிநாயகம். இராஜரெட்ணம்.**

# அக்கா
# என அழைப்பாயே

சிறிய வயதினில் எம்மோடு இருந்தாயே
சிறிய தாயார் என்ற பெருமை தந்தாயே
ஆசையுடன் அக்கா என அழைப்பாயே
ஆலவிருட்சம் போல் வளர்ந்தாயே
யாருமறியாமல் எம்மை விட்டு மறைந்தாயே
எப்படித் தாங்குவேன் உன் பிரிவை
நமது குல தெய்வம் வையூற்று பிள்ளையாரே
நமது வினைகளெல்லாம்தீர்ப்பவரும் அவரே
உன் குரலை வருடம் தோறும் கேட்பவரும் அவரே
அக் குரலொலியும் ஓய்ந்ததே
எப்படி தாங்குவேன் உன் பிரிவை
எங்கே கேட்பேன் உன் குரலை.

**திருமதி. பரமேஸ்வரி அந்தோனிப்பிள்ளை**
**சிறியதாயார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள்

பாலூட்டி வளர்த்த தாயே
பாலப் பருவம் முதலாக
பாதுகாப் புடனே
காளைப் பருவம் வரையும்
கண்ணெனக் கொண்டே
மண்ணில் நல்ல வண்ணம்
மதிப்புடனே வாழ வழி கண்ட தாயே

நல்ல புத்திமதி கூறியே
நல்ல பிள்ளைகளாகவே
நல்ல நிலையில் வளரவே
நல்வழி காட்டியே
பாலூட்டி வளர்த்தாயே

அன்பும் பண்பும்
அடக்கமும் நிறைந்த உன் இரத்தம்
அழுதபோது பாலாக உணவு
அமுதாக இனித்த பால்
அதனுள் எம் வளர்ச்சி தாயே

அழியாதே உன் நினைவு அலைகள்
அணைத்த கையை மறவோமே
அழகான தாலாட்டுக்கள்
அழகாக பாடுவாயே
அகிலத்தில் நீயின்றி வேறில்லைத் தாயே

**உன்பாத கமலம் சரணடைந்த**
**பிள்ளைகள்.**

**சிவவதனா நவேந்திராஜா**
**சிவாஜினி கணேசநாதன்**
**சிவதாரணி வேல்ச்சந்திரன்**
**சிவசாந்தி குமரேஸ்வரராஜா**
**சோ. சிவதரன்**
**சோ. சிவரூபன்**
**சோ. சிவகரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வழி

# கண்ட மாமி

மாமியாக நாம் பெற்றோம்
        மாண்புமிகு மாமியை
எங்கள் தலை தடவி
        எம்மை வளர்த்த
தாயாகவே கண்டோம்

பிறர் பிள்ளை தலை தடவ
        தன் பிள்ளை தானே வளரும் – என்றபடி
எம்மை தம்பிள்ளையாகக் கொண்டு
        நல்வழி கண்ட
நல்ல மாமி எங்கள் மாமி
        சில காலம் வாழ்ந்து
இறையடி இணைந்தார்
        களங்குதே நெஞ்சம்
வெதும்புது உள்ளம்
        என்றும் மறவோம் நாம்.

**தாயாகக் கண்ட மருமக்கள்**
**சி. நவேந்திரராஜா**
**ச. கணேசநாதன்**
**ம. வேல்ச்சந்திரன்**
**அ. குமரேஸ்வரராஜா**
**சி. வினோஜிதா**
**சி. மதுமிதா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாதம் வணங்குவோம்

பேரப்பிள்ளைகள் நாம்
அவர் தம் அன்பிற்கே
பேரானந்தம் கொண்டிருந்தோம்
சிறந்த பரிசுகள்
சிறப்பாக வழங்கும் நாளதில்
சிரித்து மகிழ்ந்திருந்தோம்

இன்று அவரில்லை
இனிக்க அணைக்கும் அவரேயில்லை
அழுதாலும் தேடினாலும் அவரில்லை
அவர் நினைவுகள்
எம்மை விட்டு நீங்காதே
எம் நெஞ்சம் உறங்காதே
அம்மம்மா, அப்பம்மா, என்று அழைக்க
அகிலத்தில் எமக்கு யாருமில்லையே
அவர் திருப்பாதம் வணங்குவோம்

**ஆசையான பேரப்பிள்ளைகள்**
**மிதுசா, கஜன், அபிசேக்**
**பிரியங்கா, பிரியங்கன்**
**பிரணவன், அபிசனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதர சகோதரிகளின் ஆறாத்துயர்

**இந்திரச் செல்வம்**

இந்திரச் செல்வமாய் எம்மிடை இருந்தவளே
எங்கள் குடும்பத் தொளியே சோதரியே
அந்த மிலான் அருட் பாடல் இனிதாய் இசைத்தவளே

அன்பினால் எங்கள் அகத்தினை ஆண்டவளே
உங்கள் மணிக் கரத்தால் ஆக்கியவை சுவைக்கும்
இன்முகமாய் நல்லுணவு எல்லோருக்கும் உவந்தளித்தாய்

நொந்து உள்ளம் சலித்து வாடுகிறோம் நாமிங்கே
உன் தன் நினைவாலே இதயம் வெடிக்குதம்மா

**சகோதர சகோதரரிகள்**

# மைத்துனர் மைத்துனிகள் ஆறாத்துயர்

**தங்கக்குணம்**

தங்கக் குணத்தாலே சாயாத பண்பாலே
தாயாக எமக்கன்பு காட்டி அணைத்தாயே
மங்காத பேச்சழகு மைத்துனியே யுங்கள்
மனங்கவரும் வண்ணமுகம் காணாது மயங்குகிறோம்
துங்கப் பிறையாளன் தேவனது சந்நிதியில்
தோத்திரம் இசைப்பாயோதுதித்து இருப்பாயோ
எங்கு சென்றாய் அம்மா நாமறியோம் என்றாலும்
உங்கள் சாந்திக்காய் சங்கரனை வேண்டுகிறோம்.

**உள்ளத்தில் இடம்பிடித்த**
**மைத்துனர் மைத்துனிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையின் சில பக்கங்கள்

பாடல்பெற்றதும் சிவபூமி எனப்பெயர் பெற்றதுமான திருக்கோணமலையில், அமரர் ஐயாத்துரை இராஜரெட்ணம் அவர்களுக்கும், வள்ளிநாயகம் தம்பதிகளின் இல்லறத்தின் பயனாக மூன்றாவது பெண் செல்வமாக 17-06-1946இல் இந்திராதேவி பிறந்தார்.

இவரின் உடன்பிறப்புகளாக திருமதி சத்தியபாமாதேவி இரட்ணம், ஸ்ரீஜெஇராமலிங்கம், திரு. மகேந்திரராஜா, திரு ஸ்ரீஸ்கந்தராஜா, செல்வி. சாரதாதேவி, திருமதி ரேணுகாதேவி செல்வப்புத்திரன் ஆகிய அறுவர்கள்.

திருக்கோணமலை ஸ்ரீ சண்முகவித்தியாலயத்தில் கல்வி கற்றார், இயற்கையில் இனிமையான குரல் வளத்தை உடைய இவர் சங்கீத வகுப்புகளில் கலந்து கொண்டு சங்கீத அறிவைம் வளர்த்துக் கொண்டார்.

திருக்கோணமலையில் பல ஆலயங்களிலும் திருமுறைகளை பண்ணுடன் பாடியும் திரு விஸ்வநாதசுவாமி (சிவன்) கோவிலில் திருவெம்பாவைப் பாடல்களை கருத்தாழத்துடன் பாடியும் பெரியோர்களால் பாராட்டுப் பெற்றார். திருமுறை ஓதுதல் இறுதியாக,

கடந்த வருடம் 2009ல் சமாது தங்க விநாயகர் ஆலய அலங்கார உற்சவத்தில் தமது குடும்பத்தினரின் திருவிழாவில் திருமுறை ஓதியதுடன் அவரது பதினைந்து வயது முதலாக ஆற்றி வந்த சமயப்பணி முடிவுக்கு வந்தது அன்று இதனை அவர் அறியமாட்டார்.

திருக்கோணமலையை பிறப்பிடமாக கொண்ட அமரர் இராசையா திரவியம் தம்பதிகளின் மூத்த புதல்வன் சோமசுந்தரம் அவர்களை காதல் திருமணம் செய்து பிள்ளைச்செல்வங்களாக ஏழு பிள்ளைகள் பிறந்தார்கள். சிவனை முழுமுதற் கடவுளாக கொண்டவர்களாக இருவரும் வாழ்ந்ததன் காரணமாக "சிவ" என்று முன்னிலைப்படுத்தி பிள்ளைகளுக்கு பெயர்களையும் சூட்டினார்கள். அதற்கமைய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவவதனா, சிவாஜினி, சிவதாரணி, சிவசாந்தி,
சிவதரன், சிவரூபன், சிவகரன்

நன்மக்களை பெற்று மகிழ்ந்திருந்த வேளையில், பிள்ளைகளுக்கு குறிப்பிட்ட வயதினில் திருமணம் செய்து தமது கடமையை நிறைவு செய்தல் வேண்டும் என்ற உறிதிப்பாட்டில் நின்று தவறாது திருமணமும் செய்து வைக்க ஆர்வம் காட்டினார்.

அந்த வகையில் மருமக்களாக நவேந்திரராசா - கணேசநாதன் வேல்ச்சந்திரன்-குமரேஸ்வராஜா, வினோஜிதா - மதுமிதா மருமக்களையும் மிதுஷா, கஜன், அபிஷேக், பிரியங்கா, பிரியங்கன், பிரணவன், அபிசனா எனும் பேரப்பிள்ளைகளையும் பெற்று நல்ல மகளாய், சகோதரியாய், மனைவியாய், தாயாய், மாமியாய் வள்ளளாய் உயர் நிலைக் குடும்பப் பெண்ணாக விளங்கினார். உடையது விளம்பேல,, ஊக்கமது கைவிடேல் என்ற படி தன் வாழ்க்கையை அமைத்து எவரும் எக்குற்றமும் கூற முடியாபடி சமுதாயத்தின் தங்கமான பிள்ளை என்ற சிறப்புப் பெற்றார்.

(சுயநலம்) தனக்கு என்ற எல்லையில் வாழ்ந்ததில்லை அனைவரும் நல்லாக வாழவேண்டும் என்ற பெரு நோக்குடையவராய் உயர் லட்சியத்துடன் வாழ்ந்து 63வது வயதிலே 14.03.2010 அன்று சிவனடி சேர்ந்தார்.

**அன்னாரின் ஆத்ம சாந்தியடைய பிராத்திப்போமாக.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலங்குது என் உயிர்

ஆதியும் அந்தமும் – இல்லா
இறைவா!
உனக்கு இதயம் உள்ளதா
என் அழகான தாயின்
முகம் நினைவில் உள்ளதா
உன்னை தினம் நினைத்து
உருகி உருகி பாடியபோதும்
நீ உருகவில்லையே
இந்த மரணம் காட்டும்
கருணை கூட உனக்கு
இல்லையே
என்ன பாவம் செய்தா
என் அம்மா
கஷ்டத்திலும் கலங்காமல்
கரைசேர்த்து விட்டவள்
கண்ணியமாக கடந்து நற்பெயர்
பெற்றவர்
உதவி கேட்டவருக்கு – இல்லை
என்று சொல்லா மனம்
உடையவள்
விருந்து கொடுத்து – அகம்
மகிழ்பவள்

கணவனை கண் கண்ட
தெய்வமாக – நினைப்பவள்
அப்படிப்பட்ட – என்
அம்மாவை ஏன்
பறித்தாய்?
ஒரு மகனாக – என்
அம்மா ஆசைப்பட்டதை எல்லாம்
மகிழ்வுடன் நிறைவேற்றினேன்
நான் அம்மாவுக்கு
நல்ல மகளாகவும்,
நண்பனாகவும் இருந்தேன்
என் வளர்ச்சி
என் அம்மாவின் முயற்சி
என் அம்மா என் மூச்சு
ஆனால் என் அம்மா என்னிடம்
"என்னை காப்பாற்றுவாயா"
என்று கேட்டபோது
கலங்கியது என் உயிர்
நொறுங்கியது என் இதயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னால் முடிந்த எல்லாம்
செய்தேன் – இறைவா!
நீ – போட்ட விதிக்கு
தடைபோட நான் யார்?

தோற்றுப்போனேன் – இந்த
உலக வாழ்வும் உறவும்
அழகு பொய் – என்று
புரிந்து கொண்டேன்
பிறப்புக்கும் இறப்புக்கும் – இடையே
உள்ள இந்த – காலம்
பணம் என்ற காகிதத்தில்
– அளவிடப்படுகிறது
ஆனால்! இந்த பணத்தால்
விதியை எதுவும் செய்ய முடியாது
என்பதை உணர்ந்து கொண்டேன்
இந்த வாழ்க்கை பொய் – என்று
புரிந்து கொண்டேன்
உலக வாழ்வில் வெறுப்பு – கொண்டேன்.
தனிமையில் அழுது அழுது
வற்றிப்போனது – எனது கண்ணீர்
அற்றுப்போனது – பந்த பாசங்கள்
என் முகம் கண்டு
அகம் புரிந்த – அம்மா
என்னை மணக்கோலத்தில்
பார்க்க ஆசைப்பட்டார்
நான் சம்மதித்தேன் என் அம்மா
ஆசியுடன்
என் அம்மா ஆசைப்பட்ட – பெண்ணை
ஆசையுடன் மணந்தேன்
கலங்கி வெறுத்து நின்ற– எனக்கு
அது மருந்தாக அமைந்தது.
அது அம்மாவுக்கும் சந்தோஷம்
என் திருமணம் – தான்
அம்மா எழுந்து நின்ற – இறுதி நாள்
இறைவன் விட்ட கடைசிநேரம்
அதுக்கு இறைவனுக்கு நன்றி
– சொல்கிறேன்
இறைவா! என் அம்மாவுக்கு
நான் என்றால் உயிர் – இந்த
உயிர் அம்மாவின் ஆசைப்படி
நான் சுமக்க வேண்டும்
அந்த அருள் கட்டாயம் – நீ
தர வேண்டும் அம்மா நீ...

**ஆசை மகன்**

**சோ. சிவரூபன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயம் பேசுகிறது

நான் என் தாயுடன் கனடாவில் இருந்து தொலைபேசியின் ஊடாக தொடர்பு கொண்டு அவருடன் கதைப்பது வழக்கம்.

வழமைபோல் தொடர்பினை ஏற்படுத்தியபோது தமக்கு மிகவும் சுகயீனமாக இருப்பதாகவும், தன்னை ஒருமுறை எனது பிள்ளையுடன் வந்து பார்த்துவிட்டுப் போகுமாறும் கேட்டுக்கொண்டார். அதற்கான ஒழுங்குகளைச் செய்கின்றேன். ஆனால் தைமாதம் வரமுடியாது இரண்டு மாதம் செல்லக்கூடும். எனப்பதிலளித்தேன். அதற்கு அவர்,

என்னை உயிருடன் பார்க்க விரும்பினால் தை மாதம் வரவேண்டும் என்றார். தான் உயிருடன் இருக்கும் போது தனது பேத்தியையும் காட்ட வேண்டும் என்றும்,

தை மாதம் எனது தம்பி சிவரூபனுக்கு திருமணமும் செய்ய வேண்டிய கடமையையும் உண்டெனவும் தை மாதமே வரவேண்டும் எனக் கூறி அழுதார்.

அழவேண்டாம் அம்மா 2010 தை மாதம் 25ந் திகதி வருகின்றேன் என ஆறுதல் கூறினேன்.

அவரது ஆசைப்படி தைமாதம் 25ந் திகதி கனடாவில் இருந்து திருக்கோணமலைக்கு வந்தேன்.

எனது பிறந்த நாள் தை 30ந் திகதியாகும் எனது பிறந்த நாளையும் இங்கு கொண்டாட வேண்டும் என்று பணித்தார்.

அவரது ஆசைப்படி எனது பிறந்த நாளையும் என் தம்பி சிவரூபனின் திருமணத்தையும் நடாத்தி முடித்தோம் தனது பேத்தியையும் கண்ணால் கண்டு ஆனந்தம் அடைந்தார்.

2010 பங்குனி மாதம் 9ந் திகதி மீண்டும் கனடா செல்வதற்கு ஏற்படுகளைச் செய்வதற்காக அம்மாவின் அனுமதியை பெறுவதற்கு விடயத்தைக் கூறினேன் அவர் மௌனமாக இருந்தார்.

வெளியில் சென்று மீண்டும் வரும் போது அம்மா தனது "கை" விரல்களை எண்ணிக் கொண்டிருந்தார்.

ஏன் அம்மா விரல்களை எண்ணுகின்றீர்கள் எனக் கேட்டேன்.

நீ போகப் போகின்றாய் அதுதான் நாட்களை எண்ணினேன் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறி கட்டியணைத்து அழுதார். நான் போகவில்லை என்று கூறியதும் மகிழ்ந்து சிரித்தார்.

தனது உடலை விட்டு உயிர் பிரிவதற்கு நாட்களை முன் கூட்டியே அவர் அறிந்து தெரிந்து செயல்பட்டுள்ளார் எமக்கு அந்த இரகசியத்தை மறைத்து தனது கடமைகளைத் திட்டமிட்டு செயற்படுத்தினார்.

எனது தம்பியின் திருமண நிகழ்வுகளை 2010 மாசிமாதம் 4ந் திகதியே நிறைவு செய்தோம் எனது பிறந்த நாளை கண்டும் மகிழ்ந்தார்.

எனது மகள் அபிசனாவை கண்டு ஆசையை நிறைவு செய்து கொண்டார். 2010 மாசி 5ந் திகதிக்குப்பின் நடமாட முடியாது. படுத்த படுக்கையில் வீழ்ந்தார்.

2010 மாசி மாதம் 4ந் திகதி வரை தான் அடைய வேண்டிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொண்டார்.

14 பங்குனி 2010ல் இறைவனடி இணைந்தார்.

சாந்தி, சாந்தி

**பாசமும், நேசமும் உள்ள**
**மகன் சோ. சிவதரன்.**

## நவாலியூர் சோமசுந்தரப் புலவர் "கன்னியா" வெந்நீரூற்றினை வியந்து பாடியது.

காதலனைப் பிரிந்தவளின் மனம்போல ஒன்று
கவிபாடிப் பரிசுபெறான் மனம்போல ஒன்று
தீது பழி கேட்டவன் தன் மனம் போல ஒன்று
செய்த பழிக் கழுங்குமவன் மனம் போல ஒன்று
நீதி பெறா ஏழைதுயர் மனம் போல ஒன்று
நிறையழிந்த கற்புடையாள் மனம் போல ஒன்று
கனலேது மெழுநீ களுண்டு கன்னியாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகிற்கு நல்வழி

எனது தாயின் மூத்த மகளாக பிறந்ததில்
எனக்கு பெருமகிழ்ச்சி அவரது
குண அம்சங்கள், செயல்முறைகள்
உலகத்திற்கு சொல்லும் நல்வழியாகும்
கண்டி, கொழும்பு என அனைத்து
வைத்தியசாலைகளிலும் அவரோடு நான்
இருந்தேன் சிறு நோவையும்
நோயையும் தாங்க முடியாத
என் தாய் அனைத்தையும் தாங்கிக்
கொண்டார் பரிவுமிகுந்தவர்
பணத்தாசை இல்லாதவர் உதவி
செய்தோருக்கு நன்றியும் அதற்கான
பதில் உதவிகளையும் செய்யாமல்
தூங்கவேமாட்டார் உணவுகள்
கொடுக்கவேண்டும் என்பதும்
பணத்தைவாரி வழங்க வேண்டும்.
என்பதும் அவரது இறுதிநாள்வரை
அவரது இரத்ததோடு
கலந்த பெருங்குணம்

**ஆசையான மூத்த மகள்**
**சிவவதனா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியிலும்

# பொறுமை மிகுந்தவள்

இந்திரா என் சகோதரி
பூமியிலும் பொறுமை மிகுந்தவள்
இந்திரா அம்மா என அழைப்பேன்
பொங்கி வரும் அன்பினிலே.

**உயிரான சகோதரன்**
**இ. மகேந்திரன்**
**உரிமையாளர்**
**பிருந்தாவன கல்யாண மண்டபம்**

# அன்பிற்கு

# அடிமையானோம்

எமது தாய் தந்தையரை
தமது தாயாக தந்தையாக மதித்தார்
எமது உள்ளங்களை தனதாக்கி
எமது உயிர் அக்காவாக நின்றார்
மலா எனவும் ரோகினி யெனவும்
அன்புடன் அணைப்பார்
மறவாமல் இறுதிவரை எம்மை
நினைத்தார் அவரது அளவற்ற அன்பிற்கு அடிமையானோம்
அவரது பிரிவால் துடித்து அழுகின்றோம்.
அவரது அமைதிக்காய் ஆண்டவனை வேண்டுகின்றோம்.

**தங்கைகள்**
**மலர்**
**ரோகினி**
**(சிறிய தாயின் பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனைத் துளிகள்

மனிதர்களே நினைவில் கொள்ளுங்கள்!

சரீரங்கள் அநித்தியமானவை, செல்வம், அதிகாரம், அழகு, புகழ் எல்லாமே நிலையற்றவை உங்களுடன் எமன் என்றும் உள்ளான் ஜாக்கிரதை... ஜாக்கிரதை ஆகையால் தர்மத்தைக் கடைப்பிடியுங்கள் விரைவில் ஆத்மஞானம் பெற்று பாக்கிய சாலியாகுங்கள்.

– பிரபோத சிந்தாமணி –

மரணத்திற்கு மனிதர்கள் அழுவதைப் பற்றியும் அஞ்சுவது பற்றியும் கவியரசன் தாகூர் சொல்லும் உவமை மிக மிக அழகானது. ஒரு குழந்தைக்கு பாலூட்டும் தாய் கொஞ்சம் நேரம் ஆனதும் ஒரு மார்பிலிருந்து வலு கட்டாயமாகப் பரிக்கும் பொது குழந்தை உதட்டைப் பிதுக்கிப் பிதுக்கி அழமும். ஆனால் வலுகட்டாயமாக ஒரு மார்பிலிருந்து பிரித்ததாய் அடுத்த மார்பில் குழந்தையை உடன் சேர்ப்பான். குழந்தை அழுகையை மறந்து விட்டுப் பால் அருந்தும் அப்படித்தான். ஓர் உடலில் இருந்து உயிர் பிரிக்கப்பட்டதும் அழுகை. அது மறு உடலில் சேர்க்கப்படும் அப்போது ஆனந்தம். என்ன அழகான உவமை.

– **தாகூர்** –

உலகத்தில் இந்த மரணத்தில் மட்டும்
உயர்வும் தாழ்வும் இல்லை – இதுரு
உருவமில்லாத எவனோ ஒருவன்
உண் டாக்கி வைத்த எல்லை

விதியென்னும் குழந்தை கையில்
உலகந் தன்னை
விளையாடக் கொடுத்து விட்டாள்
இயற்கை அன்னை – அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டெறியும் உருட்டிவிடும்

மனிதர் வாழ்வை

**பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்**

ஆத்மா என்பது எங்கே இருக்கிறது. ஆத்மா அழிவில்லாதது என்று கூறுகிறார்கள் அப்படியானால் அழியக்கூடிய உடம்பில் அது எங்கே இருக்கிறது. உடல் அழிந்தபின் எங்கே போகிறது?

"ஆத்மா பிறப்பதோ, உடம்பில் இறப்பதோ இல்லை அதனால் அது அழிவு இல்லாதது. ஒரு பூ தோன்றுகிறது பிறது அது மலர்ச்சி பெறுகிறது. பிறகு வாடுகிறது கடைசியில் உதிருகிறது. இதுவே நமது உடலுக்கும் பொருந்தும் அதிலும் தோற்றம், வளர்ச்சி, மலர்ச்சி வாட்டம், முடிவு எல்லாமே உண்டு. ஆகவே பிறப்பு இறப்பு என்ற இரண்டு எல்லைகளுக்கிடையே மாற்றம் உண்டாகக் கூடிய எதுவும் அழியக்கூடியதுதான். இந்த இரண்டு எல்லைகளுமே இல்லை என்றால் மாற்றமும் கிடையாது, அது அழிவில்லாதது. இந்த அடிப்படையில் உடல் அழியக் கூடியது ஆத்மா அழிவில்லாதது.

குயவன் பானையைச் செய்கிறான் அப்பொது பானை உருவெடுக்கிறது. உள்ளே காற்று நிறைந்து இருக்கிறது. பானைக்கு வெளியேயும் காற்று இருக்கிறது. பானை உண்டான பிறகு காற்று உள்ளே நிறைந்தது. ஆனால் அதை குயவன் உண்டாக்கவில்லை. பானை உடையலாம். ஆனால் உள்ளே உள்ள காற்று அழிவில்லை. பானைக்குள்ளே இருந்த காற்று பானைக்கு வெளியில் உள்ள காற்று வெளியுடன் கலந்து விடுகிறது. பானை உருவாகி மறைகிறது. ஆனால் அதன் உள்ளே இருக்கும் காற்று உருவாவதும் இல்லை. மறைவதும் இல்லை.

ஆத்மா நமது அழியக்கூடிய உடம்பினுள் இருக்கும் அழியாத உண்மை. அது நம்முடைய உம்புக்கு உள்ளேயும் வெளியேயும், முன்னும் பின்னும் தொடர்ந்து இருக்கிறது. பானைக்கு உள்ளேயும் வெளியேயும் அது தோன்றுவதற்கு முன்பும் பின்பும் தொடர்ந்து இருக்கும் காற்றைப் போல.

**– சுவாமி சின்மயானந்தர் –**

**(கீத ஞான யக்ஞ உரையிலிருந்து)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதி:

எவனுடைய ஆத்மா எந்த மாதிரியான வாழ்க்கையை தேர்ந்தெடுக்கிறதோ அதுதான் பூவுலகில் அவனுடைய விதியாக அமைகிறது.

மனிதப் பிறவில் நாம் எதிலும் நல்லது கெட்டதை ஆராயும் பகுத்தறிவையும் நல்ல பண்புகளையும் வளர்த்து சதா மெய்யறிவையே நாடவேண்டும் எந்தச் சந்தர்ப்பத்திலும் எங்கிருந்தாலும் சிறந்த வாழ்க்கை வாழவேண்டும்.

சத்தியத்திலும் நேர்மையிலும் தளராத நம்பிக்கை கொள்ளவேண்டும் அதுதான் ஆனந்தத்திற்கு வழி அதைப்பொறுத்தே அடுத்த பிறவி அமையும்.

செல்வம் தற்செருக்கு போன்ற ஆசாபாசங்களினால் மதி மங்காமல் ஆத்மா கறைபடாமல் எப்போதும் அறிவு விழிப்புடன் இருப்போமாக! சகோதர மனிதர்களிடமும் கடவுளிடமும் அன்பு கொள்வோமாக அதுதான் இப்பிறவியிலும் இனிவரும் பிறவிப் பயணங்களிலும் நம் ஆனந்தத்திற்கு உறுதுணையாகும்.

– பிளோட்டோ –

மனிதர்களிடம் பொதுவாக மரண பயம் இருக்கிறது அதற்கு என்ன காரணம்?

மனிதன் இந்தப் பிறவியின் முன்பு பல பிறவிகளில் மரணத்தைச் சந்தித்துள்ளான். அது அவனது ஆழ்மனதில் இருந்து கொண்டிருக்கிறது. அதனால் மனிதன் மரணத்திற்கு பயப்படுகிறான் இது ஒரு பதில்.

மற்றொருபதில் இயல்பாகவே நேரம் மரணம் நமது உண்மையான ஒரு நண்பன் என்றும் அஞ்ஞானமும் காரணமாக நாம் அதைக் கண்டு பயப்படுகிறோம். அதை பெறுகிறோம்.

தெய்வ பக்தியும் புண்ணிய செயல்களும் செய்து வாழும் ஒருவனுக்கு மரணம் உண்மையான ஒரு நண்பனாக விளங்கும். தீயவர்களும் தெய்வபக்தி இல்லாதவர்களும் தான் மரணத்தை நினைத்துப் பயப்பட வேண்டும்.

பித்ரு காரியங்களை எல்லோரும் செய்ய வேண்டுமா? செய்யாவிட்டால் என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த முன்னோர்களை உரிய நாளில் பக்தி சிரத்தையுடன் வழிபட வேண்டும். இக்காரியங்களைச் சிரத்தையுடன் செய்ய வேண்டும். என்பதற்காகத்தன் சிராத்தம் என்று சொல்லும் அமைந்துள்ளது.

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போதே பித்ருக்களுடன் தான் பிறக்கிறான். அக்கடனை செலுத்தாவிட்டால் பித்ருசாபம் ஏற்படும் பித்ரு சாபம் உள்ளவர்கள் மறுமையிலும் துன்பப்படும் வகையில் பிறவிகள் எடுப்பார்கள்.

**நன்றி: இந்துமதம் பதிலளிக்கிறது**

பூமி தாயாகிட தந்தை வானமாவார்
தாயும் தந்தையும் பிள்ளைக்கு கண்ணின் இமையாவார்
தந்தைமேல் இமையாகவும் தாய் கீழே இமையாகவும் காத்திடுவர்
மேல் இமை அசைந்து காக்கும் கீழ் இமை அசையாது காக்கும்
தாயின் அன்பு கோயிலாகும் தந்தையின் சொல் மந்தரமாகும்.
பிள்ளைக்கு தந்தை ஒருவன் தாயும் ஒருத்தியே
நம் எல்லோருக்கும் தந்தையும் தாயும் இறைவனே.

**தொகுப்பு**
**இ. மகேந்திரன்**
**உரிமையாளர்**
**பிருந்தாவனம் கல்யாண மண்டபம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதையிலிருந்து சில துளிகள்.

❖ யார் எல்லா ஆசைகளையும் விட்டு பற்றின்றி 'நான் எனது' என்ற எண்ணங்கள் இன்றி வாழ்கிறானோ அவன் அமைதி அடைகிறான்.

❖ புலன்கள் ஆற்றல் வாய்ந்தவை என்று சொல்கிறார்கள். ஆனால் புலன்களை விட மனம் ஆற்றல் வாய்ந்தது. மனத்தை விட புத்தி ஆற்றல் வாய்ந்தது. புத்தியை விட ஆற்றல் மிக்கது ஆன்மா.

❖ புத்தி விழித்தெழப்பெற்ற மன மயக்கம் அற்ற இறைவனை அறிந்த இறைவனில் நிலைத்திருக்கின்ற ஒருவன் விரும்புவது கிடைப்பதால் மகிழ்வதும் இல்லை விரும்பாதது கிடைப்பதால் துயருறுவதும் இல்லை.

❖ மனத்தால் வேறு எதையும் நாடாமல் மேலான ஒளிமயமான இறைவனை இடைவிடாமல் தியானிப்பவன் அவரை அடைகின்றான்.

❖ பொருட்களை நினைப்பதனால் அவற்றின் மீது பற்று ஏற்படுகிறது பற்று ஆசையாக மாறுகின்றது. ஆசையால் கோபம் கோபத்தினால் மனமயக்கம் மன மயக்கத்தால் நினைவு நழுவுதல் நினைவு நழுவுவதால் பகுத்தறிவின் சீர்கேடு பகுத்தறிவின் சீர்கேட்டினால் மனிதன் அழிகின்றான்.

❖ மரண காலத்திலும் யார் என்னையே நினைத்தவாறு உடம்பை விட்டுச் செல்கிறானோ அவன் என் நிலையை அடைகிறான் இதில் சந்தேகம் இல்லை.

❖ எப்போதும் கீதையைப் பயில்வதில் மூழ்கி இருப்பவன் முன்வினைப் பயனில் கட்டுண்டு கிடந்தாலும் முக்தனே இந்த உலகில் சுகத்தை அனுபவிப்பவன் அவனே அவன் கர்மத்தில் சிக்குவதில்லை.

❖ ஆன்மா எந்த ஆயுதத்தாலும் வெட்டப்பட முடியாததும், நெருப்பால் எரிக்கப்பட முடியாததும், நீரால் நனைக்கப்பட முடியாததும், காற்றினால் உலர்த்தப்பட முடியாததுமாகும்.

❖ பிறந்தவன் எவனுக்கும் மரணமும், இறந்தவனுக்குப் பிறப்பும் நிச்சயமே பரிகாரம் காண முடியாத இந்த விஷயத்திற்காக நீ கவலைப்படாதே

- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது குலவிளக்கு

அமரர் திருமதி. இந்திராதேவி சோமசுந்தரம்

அவர்கள் 14.03.2010 அன்று இறைபதம் அடைந்த

செய்திகேட்டு தாளாத துன்பத்தில் தவித்திருந்த எங்களை மீளாத்

துயரத்தில் வீழாது காத்தும், ஆளாக நின்று ஆறுதல் கூறியும்

அனைத்து உதவிகளையும் கேளாது செய்தும் சுற்றமாய் நின்று

கலந்து கொண்டோருக்கும்,

அருட்சகோதரிகளுக்கும், தொலைபேசி, தொலைநகல்,

தந்திகள், மின் அஞ்சல் மூலம் துயர் பகின்றோருக்கும் மலர்கள்,

மலர்மாலைகளால் அஞ்சலி செய்தோர்களுக்கும்,

தொலைக்காட்சி சார்ந்த ஊடகத் துறையினருக்கும்

அபரகிரியைகளையும் நிறைவாகச் செய்த சைவ குருமாருக்கும்,

பஞ்சபுராணம், திருப்பொற்சுண்ணம் இசைத்த

பெரியார்களுக்கும் கடமைகளைச் செய்த உறவினர்கள்

நண்பர்கள் மற்றும் உதவிக்கரம் நீட்டி தோளோடு தோள் கொடுத்த

நல்லிதயங்களுக்கும் ஆத்ம சாந்திக் கிரிகைகளிலும்

பங்குபற்றியோர்களுக்கும் இம்மலரினை உரிய காலத்தில் மலரச்

செய்த அச்சகத்தார்களுக்கும் எமது ஆத்மார்த்தமான

நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்ச விருட்சம்

அமரர்கள் இராசையா + திரவியம்
↓
சோமசுந்தரம்
புவனேஸ்வரி + நடேசன்
மகேந்திரன் + காந்திமலர்
ஸ்ரீதரன்
அநுராதா + ஜெயக்குமார்
ரேவதி + சதாசிவம்
புவனேந்திரன் + லோஜினி

(அமரர்) இராஜரெட்ணம் + வள்ளிநாயகம்
↓
சத்தியபாமாதேவி + அமரர் இரட்ணம்
ஸ்ரீஜெயதேவி + இராமலிங்கம்
இந்திராதேவி + சோமசுந்தரம்
மகேந்திரராஜா + இரட்ணசுசீலா
ஸ்ரீஸ்கந்தராஜா + ஜெகதீஸ்வரி
சாரதாதேவி
ரேணுகாதேவி + செல்வபுத்திரன்

சோமசுந்தரம் + இந்திராதேவி
↓
சிவவதனா + நவேந்திரராஜா
சிவாஜினி + கணேசநாதன் → மிதுஷா, கஜன், அபிஷேக்
சிவதாரணி + வேல்ச்சந்திரன்
சிவசாந்தி + குமரேஸ்வரராஜா → பிரியங்கா, பிரியங்கன், பிரணவன்
சிவதரன் + வினோஜிதா → அபிசனா
சிவரூபன் + மதுமிதா
சிவகரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்.
எதற்காக நீ அழுகிறாய் ?
எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு ?
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு ?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை
மற்றொருவருடையதாகிறது
மற்றொருநாள்,
அது வேறொருவருடையதாகும்.

'இதுவே உலக நியதியும்,
எனது படைப்பின் சாராம்சமுமாகும்'
- பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org